

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 29-01-2025


# ஆளுநர் விளக்கம் தர வேண்டும்!

குடியரசு தினத்தன்று குழப்பம் ஏற்படுத்தும் வகையில் குதர்க்க அறிக்கை வெளியிடும் ஆளுநர் ரவி, தன்னைப் பற்றி ஊடகங்கள் எழுதி வரும் செய்திக்கு இதுவரை விளக்கம் அளித்தாரா என்றால் இல்லை. அச்செய்தியில் அவரது கண்ணுக்கு இன்னும் தெரியவில்லையா?

19.1.2025 தேதியிட்ட 'ஜூனியர் விகடன்' இதழில், 'கவர்னரின் திருவிளையாடல்' என்ற தலைப்பில் (பக்கம் 3) வெளியாகி இருக்கும் செய்திக்கு ஆளுநர் ரவி முதலில் விளக்கம் அளிக்க வேண்டும். அந்த செய்தி இதுதான்...

**"எடப்பாடிக்கு நெருக்கமானவரின் கல்லூரியில் உற்சாகமாக விழா கொண்டாடியிருக்கிறாரே ஆளுநர்...கவனித்தீரா?"**

"அங்கிருந்துதானே வருகிறேன்... திருச்சி மாவட்டத்தில் இருக்கும் 'முசிறி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி' என்ற கல்வி நிறுவனம், எடப்பாடியின் வலது கரமான சேலம் புறநகர் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் இளங்கோவனுடையது. இவர்மீதும் இவருடைய மகன் பிரவீன்மீதும் சொத்துக்குவிப்பு வழக்கு, கூட்டுறவு வங்கி முறைகேடு என ஏகப்பட்ட வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. சமீபத்தில்தான் வரி ஏய்ப்பு புகார் காரணமாக அந்தக் கல்லூரியில் ரெய்டு நடத்தி, முக்கிய ஆவணங்கள் அடங்கிய இரண்டு அறைகளை சீல் வைத்திருக்கிறது ஐ.டி. இவ்வளவு சிக்கலான சூழலில்தான், அந்தக் கல்லூரியில் பொங்கல் விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி"

**"ஆளுநர் பங்கேற்கிறார் என்றால் நிகழ்ச்சி நடக்கும் கல்லூரி நிர்வாகம் குறித்து பலகட்ட விசாரணைகள் நடந்திருக்குமே?"**

"அதில்தான் சர்ச்சைகள் வெடிக்கின்றன. 'ஒரு விழாவில் ஆளுநர் கலந்து கொள்கிறார் என்றால் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் குறித்து அலசி ஆராயப்படும். அப்படியிருக்கும்போது, ஐ.டி.ரேடாரிலுள்ள முக்கியப் புள்ளியான சேலம் இளங்கோவன் கல்லூரிக்கு எப்படிப் போனார் கவர்னர்?' என்று கேள்வி எழுந்திருக்கிறது. இந்தக் கேள்விக்கு இரண்டு விதமான பதில்களைச் சொல்கிறார்கள். அதாவது, அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க எல்லா வழிகளையும் பயன்படுத்திவருகிறது டெல்லி. அந்த வகையில், 'இளங்கோவனைப் பகடையாகப் பயன்படுத்தி, அவரது ரூட்டிலும் முயற்சி நடக்கிறது' என்கிறார்கள் ஒரு தரப்பினர். அதேநேரம், இளங்கோவனின் சர்ச்சைக்குரிய பின்னணி, ஆளுநருக்குத் தெரிந்திருந்தால், நிகழ்ச்சியில் நிச்சயம் பங்கேற்கச் சம்மதித்திருக்க மாட்டார்' என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். அதாவது, இளங்கோவன் குறித்த தகவல்களை மறைத்து 'இயற்கை விவசாயிகளோடு பொங்கல் நிகழ்ச்சி என்று ஆளுநரையும், அவருடைய இல்லத் தரப்பையும் பவன் புள்ளிகள் அழைத்துச் சென்றுவிட்டார்கள்' என்றும் சொல்கிறார்கள். இது ஆளுநரின் திருவிளையாடலா அல்லது அவரை வைத்து விளையாடிவிட்டார்களா... என்று பட்டிமன்றம் நடக்கிறது பவன் வட்டாரத்தில்."

**"எது எப்படியோ... ஆளுநரின் விசிட்டால் இளங்கோவன் தலைக்குக் கொஞ்ச நாளைக்கு ஆபத்து இருக்காது" - என்கிறது 'ஜூனியர் விகடன்'. ஆளுநர் பெருந்தகை இதற்கு விளக்கம் அளித்திருக்க வேண்டாமா?**

ஜனவரி 22-24 தேதியிட்ட 'நக்கீரன்' இதழில் 'கவர்னருடன் அ.தி.மு.க. பேரம்' என்ற தலைப்பில் (பக்கம் 15-16) செய்திக்கட்டுரை தீட்டப்பட்டுள்ளது. அந்தச் செய்தி இதுதான்...

"ஜனவரி 11ஆம் தேதி முசிறியிலுள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் இயற்கை விவசாயம் சார்ந்த விஷயங்கள் குறித்துப் பேசுவதற்காக ஆளுநர் சென்றுள்ளார். அதை முடித்துவிட்டு மற்றொரு என்.ஜி.ஓ. நிகழ்ச்சிக்கும் சென்றுள்ளார்.

முசிறியிலுள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியின் உரிமையாளர், எடப்பாடியின் நெருங்கிய நண்பரான அ.தி.மு.க. இளங்கோவன். இவர் ஏற்கெனவே கூட்டுறவு சங்க சேர்மனாகவும் இருந்துள்ளார். அப்போதுதான் மோடி ஆட்சியில் 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாதென அறிவிக்கப்பட்டன. அந்த நேரத்தில், செல்லாத ரூபாய் நோட்டுக்களை சேலம் கூட்டுறவு சங்கத்தில் மாற்றிக்கொடுத்த விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணையில் சிக்கினார். 2012-22 வரை எடப்பாடி வகித்து வந்த கட்சிப் பதவி இளங்கோவனுக்கு கொடுக்கப்பட்டது. அந்தளவிற்கு எடப்பாடிக்கு விசுவாசியாகவும், பினாமியாகவும் செயல்படுபவர்தான் இந்த இளங்கோவன். சென்ற வாரம்கூட இளங்கோவனின் சம்பந்தி மற்றும் அவர் தொடர்பான இடங்களில் ஈ.டி. சோதனை நடந்துள்ளது. இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு பிறகு தான் முசிறிக்கு ஆளுநர் சென்றுள்ளார்.

ஒரு மாநிலத்தின் ஆளுநர், ஈ.டி. விசாரணைக்குள்ளான ஒருவரின் கல்லூரிக்கு அடுத்த நாளே சிறப்பு அழைப்பாளராகப் போகிறார் என்றால் எந்தளவிற்கு அ.தி.மு.க.வுக்கும் ஆளுநருக்கும் மறைமுகக் கூட்டணி இருக்கிறது என்பதை வெட்டவெளிச்சமாகக் காட்டுகிறது.

மேலும் இந்த விவகாரத்தால் ஆளுநர் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு, அவருடைய நேர்மையிலும் சந்தேகம் எழுகின்றது. இந்தக் கல்லூரி விழாவில் ஆளுநர் கலந்துகொண்ட விஷயம் கேள்விப்பட்டதுமே ஒன்றிய உள்துறை அமைச்சகத்திலிருந்து அதுகுறித்து விசாரணை செய்துள்ளார்களாம். அதேவேளை நிர்மலா சீதாராமனும் இதுகுறித்து விசாரித்துள்ளாராம்.

எடப்பாடியின் பினாமியாக இருந்துவரும் இளங்கோவனின் கல்லூரி நிகழ்ச்சிக்குச் சென்றது வெறுமனே பொங்கல் விழாவாக இல்லாமல், அவர்கள்மீது நடத்தப்படும் ஈ.டி. விசாரணையை நிறுத்துவதற்கு ஆளுநர் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும்தான் என்ற தகவல் கசிந்துள்ளது..."

- என்று எழுதி இருக்கிறது 'நக்கீரன்' இதழ்.

வருமானவரி, அமலாக்கத்துறை விசாரணை வளையத்தில் சிக்கி இருப்பவரின் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஆளுநர் சென்றதன் பின்னணி என்ன? மர்மம் என்ன?

**பொய்களையும் புனைவுகளையும் தினந்தோறும் அறிக்கையாக, பேச்சுகளாக உதிர்த்துவரும் ஆளுநர், தன் மீது தமிழ்நாட்டு ஊடகங்கள் எழுதும் செய்திகளுக்குப் பொதுவெளியில் முதலில் விளக்கம் அளித்திருக்க வேண்டாமா?**



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி அடுத்த பாலஜங்கமன ஹள்ளி கிராமத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு ரூ.15.99 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.1.83 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து 524 பயனாளிகளுக்கு ரூ.5.24 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பின்னர் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே கட்டப்பட்டு வரும் கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தினை ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கி.சாந்தி, எம்.பி. ஆ.மணி கிழக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம் பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்டச் செய லாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன், முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரசியலமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை!

# சனாதனம் குறித்து - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சுக்கு எதிராக வழக்குத் தொடர உச்சநீதிமன்றம் அனுமதி மறுப்பு!

## துணை முதல்வருக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!

**புதுடெல்லி, ஜன. 29 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சனாதனம் குறித்த பேச்சுக்கு எதிராக வழக்கு தொடர உச்சநீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளதைத் தொடர்ந்து வழக்கு தொடர அனுமதி கோரிய 3 ரிட் மனுக்களையும் மனுதாரர்கள் திரும்பப் பெற்றனர் !**

**இது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும்.**

இது பற்றிய விவரம் வருமாறு:–

சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், "இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டார்.

2.9.2023 அன்று சென்னையில் பேசிய தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக வழக்கறிஞர் பி.ஜெகநாத் மற்றும் இருவர் உச்ச



நீதிமன்றத்தில் மூன்று ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். சனாதன தர்மம் தொடர்பான அவரது பேச்சு அரசியல் சாசனத்துக்கு எதிரானது என அறிவிக்குமாறு கோரியிருந்தார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்குமாறும் காவல்துறை தலைமை இயக்குநரிடம் (டிஜிபி) கோரிக்கை விடுத்தனர்.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (27.1.2025) கௌரவ நீதிபதிகள் பேலா எம். திரிவேதி மற்றும் பிரசன்னா பி.வரலே ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தபோது, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் குறித்து கூறிய கருத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் ஏதும் மீறப்படவில்லை என்றும், அவர் தெரிவித்த கருத்தில் எவ்விதத் தவறும் இல்லை என்றும் கூறி இந்த ரிட் மனுக்கள் விதி 32ன் கீழ் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று நீதிபதிகள் குறிப்பிட்டு மனுக்களை தள்ளுபடி செய்திட முடிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து மனுதாரர்கள் 3 மனுக்களையும் திரும்பப் பெற்றனர்.

இவ்வழக்கில் ஒன்றிய அரசு சார்பில் முகில் ரோட்டகி வாதிட்டார். உதயநிதி ஸ்டாலின் சார்பில் மூத்த வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் ஆஜராகி வழக்கில் வெற்றி தேடித்தந்துள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளின் மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் குறித்து கூறிய கருத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி அடிப்படை உரிமைகள் ஏதும் மீறப்படவில்லை என்பது நிரூபணமாகி உள்ளது.

இது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளில், அவருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக கருதப்படுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடியாபட்டியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் வரவேற்புரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், தலைமைக் கழகப் பேச்சாளர் சூர்யா வெற்றிகொண்டான், டாக்டர் ரகு அண்ணாமலை, ஒன்றியச் செயலாளர்கள் பொன்.ராமலிங்கம், வி.ஆர். இளையராஜா, ஆறு.சிதம்பரம், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக் குமார், ஆர்.எஸ்.ராஜ பெரியண்ணன், பி.எல்.ராஜமாணிக்கம், ஜெய கிருஷ்ணராஜ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.







முதலமைச்சர் அவர்கள், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் தொல்லியல் துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தில், 10.23 ஏக்கர் பரப்பளவில், ரூபாய் 22 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார். கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற காணொளி காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர் அருங்காட்சியக கட்டட வரைபடத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

கும்பகோணத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்த பல்வேறு பொய் வழக்கிலிருந்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகளை தஞ்சாவூர் சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது.

